**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, மாசி மாதம் 08 ம் நாள்
**இ.ம.எண். 22/2023**
**இல்**
**அசல் வழக்கு எண். 195/2019**

1. R. அமுதா
2. R. ராஜசேகர் .. மனுதாரர்கள்/ வாதிகள்

//எதிர்//

1. S. ராமமூர்த்தி ..1–ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. S. விஜயபாஸ்கரன்
உதவிபொறியாளர் நீர்வளத்துறை
பாசனப்பிரிவு, செம்பனார்கோவில். .. 2–ம் எதிர்மனுதாரர்/ சேர்க்கவேண்டிய தரப்பினர்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 20.02.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. தியாகராஜன், அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது மனுவில் விவரிக்கப்பட்டுள்ள 2–ம் எதிர்மனுதாரர் S. விஜயபாஸ்கரனை இவ்வழக்கில் புதிய தரப்பினராக சேர்க்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுதாரர் தரப்பில், இந்த இடைமனுவின் மனுதாரர் என்றும், வழக்கில் 1ம் வாதி என்றும், 2–ம் வாதி தனது மகன் என்றும், அவருக்காகவும் சேர்த்து இந்த அபிடவிட்டை தான் தாக்கல் செய்ததாகவும், மேற்படி வழக்கு விபரம் நன்கு தெரியும் என்றும், தாங்கள் இந்த வழக்கை பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டனை

பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கில் சேர்க்கவேண்டிய தரப்பினரான 2–ம் எதிர்மனுதாரர் S. விஜயபாஸ்கரன் இவ்வழக்கின் பிரதிவாதியான S. ராமமூர்த்தியுடன் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தாவா சொத்துகளை தாங்கள் அனுபவிப்பதற்கு தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக தனது அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி 2–ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்து வருவதாகவும், இது தொடர்பாக 2–ம் எதிர்மனுதாரர் S.விஜயபாஸ்கரருக்கும் மற்றும் அவரது மேலதிகாரிகளுக்கும் கடந்த 07–09–2022 தாங்கள் தங்களது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்ததாகவும், அறிவிப்பின் அலுவலக நகலை இத்துடன் தாக்கல் செய்ததாகவும், மேற்படி 07–09–2022 தேதியிட்ட அறிவிப்பை 2–ம் எதிர்மனுதாரர் S. விஜயபாஸ்கரன் மற்றும் அவரது உயர் அதிகாரிகள் பெற்றுக்கொண்டதற்கான மூன்று அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் இத்துடன் தாக்கல் செய்ததாகவும் இவைகளை அபிடவிட்டில் ஒரு பாகமாக கருதும்படி சமூகத்தை தான் பணிவுடன் வேண்டியும், மேற்படி தங்களின் 07–09–2022 தேதியிட்ட அறிவிப்பு மற்றும் 07–11–2022 தேதியிட்ட அறிவிப்பு ஆகிய இரண்டிற்கும் நாளது வரை பதில் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றும், இந்நிலையில் மேற்படி 2–ம் எதிர்மனுதாரர் மீண்டும் தவறான சங்கதிகள் கூறி மேற்படி பிரதிவாதி S. ராமமூர்த்தியின் தூண்டுதலின் போரில் தனது வீட்டின் கதவில் கடந்த 30–12–2022 அன்று தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அறிவிப்பு ஒன்றை ஒட்டி சென்றதாகவும், 30–12–2022 தேதியிட்ட 2–ம் எதிர்மனுதாரரின் அறிவிப்பானது தங்களுக்கு மட்டுமே தாவா கிராமத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி 2–ம் எதிர்மனுதாரரின் 30–12–2022 தேதியிட்ட அறிவிப்பின் சர்வுடு நகல் இத்துடன் தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி 2–ம் எதிர்மனுதாரர் S. விஜயபாஸ்கரன் இவ்வழக்கின் பிரதிவாதி S. ராமமூர்த்தியுடன் வஞ்சக கூட்டு சேர்ந்து தாவா சொத்துகளை தாங்கள் அனுபவிப்பதற்கு தொடர்ந்து தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி இடையூறு செய்ய முற்படுவதால் அவரை இவ்வழக்கில் ஒரு அவசியமான தரப்பினராக சேர்க்கவேண்டியது அவசியமும், நியாயமாகவும் உள்ளதாகவும், இல்லையென்றால் தங்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் சம்பவிக்கும் என்றும், எனவே, இந்த வழக்கில் இந்த மனுவில்

விவரிக்கப்பட்டுள்ள 2-ம் எதிர்மனுதாரர் S. விஜயபாஸ்கரனை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க உத்தரவாக வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிருரையின் சுருக்கம்:**

3. மனுதாரர்கள் /வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு U/s Order 1 Rule 10 (2) C.P.C சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த கவுண்டரில் வியாகதமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர மற்ற மனுவிலும் அதனுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டிலும் கூறியுள்ள அனைத்து அம்சங்களும் சரியல்ல. இதனை இந்த முதல் எதிர்மனுதாரர்.பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார்.

4. மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் பாரா 2-ல் தாவா வழக்கை மனுதாரர்கள் முதல் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யான ஆவணங்கள் அடிப்படையில் பேர்ஜரியான ஆவணங்கள் அடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்பது உண்மை. அதனை மறுத்து முதல் எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையும் எதிர் உரையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும் உண்மை.

5. மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவில் நீர்வளத்துறை பாசனபிரிவு உதவி பொறியாளர் திரு. விஜயபாஸ்கரன் அவர்களை தனிப்பட்ட முறையில் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கூறுவதற்கு தக்க காரணங்களை மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் மனுதாரர்கள் கூறவில்லை. மேலும் தாவா வழக்கிற்கும் தாவா சொத்திற்கும் 2-ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், தாவா சொத்துகளை மனுதாரர்கள் அனுபவிப்பதற்கு தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக அதிகாரத்தை பயன்படுத்தி இடையூறு செய்து வருவதாக கூறுவது சரியல்ல. இதனை முதல் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார்.

6. மனுதாரர்கள் வேண்டுமென்றே வழக்கிற்கு சம்பந்தமில்லாத அரசு அதிகாரியை தனிப்பட்ட முறையில் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கூறுவதற்கு தகுந்த காரணமும் இல்லை. இந்த மனுதாரர்கள் 2-ம் எதிர்மனுதாரர்

விஜயபாஸ்கருக்கும் அவருடைய மேலதிகாரிகளுக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்ததாகவும், அதற்கு 2-ம் எதிர்மனுதாரர் விஜயபாஸ்கர் கொடுத்த பதில் உள் நோக்கத்துடன் மறைத்துள்ளதாகவும், மேற்படி மனுதாரர்கள் கொடுத்த அறிவிப்புகளுக்கு இந்த 2-ம் எதிர்மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று கூறுவது சரியல்ல. மேற்படி 2-ம் எதிர்மனுதாரர் மனுதாரர் வீட்டின் கதவில் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அறிவிப்பு ஒன்றை ஒட்டி சென்றதாகவும், 30.12.2022 தேதியிட்ட 2-ம் எதிர்மனுதாரரின் அறிவிப்பானது மனுதாரர்களுக்கு மட்டுமே தாவா கிராமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பின் உண்மை தன்மையை நிரூபிக்க மனுதாரர்கள் கடமைப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

7. தாவா 2வது அயிட்ட சொத்திற்கு வடக்கே உள்ள வெட்டு வாய்க்கால் உள்ளது என்றும், அதன் வலது கரையில் 1-ம் வாதியின் கணவரும் 2-ம் வாதியின் தகப்பனாருமான சண்முகம் மகன் ராமலிங்கம் ஆக்கிரமித்து வேலி வைத்து அடைத்ததை நீர்வளத்துறை அதிகாரியான விஜயபாஸ்கரன் வட்டாட்சியர் முன்னிலையில் நேரடியாக தாவா இடத்தை பார்வையிட்டு மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு படி 1-ம் வாதியின் கணவர் அமைத்த வேலியை அப்புறப்படுத்தினார் என்றும், ஆனால் அந்த நடவடிக்கைகளை மதிக்காமல் மீண்டும் வாதியின் கணவர் நீர்நிலை புறம்போக்கை ஆக்கிரமித்து வேலி வைத்து அடைத்துள்ளார் என்றும், அதன் பிறகு மீண்டும் அரசாங்கத்தால் அந்த வேலியை அகற்றி அரசாங்கத்தின் வசம் எடுக்கப்பட்டது என்றும், இவைகளை மறைத்து மனுதாரர் விஜயபாஸ்கர் என்பவரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

8.இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:</u>**

9. மனுதாரர் தரப்பில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்நிலையில் இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டிய தரப்பினரான விஜயபாஸ்கரன் பிரதிவாதியுடன் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தாவா சொத்துகளை மனுதாரர்கள் அனுபவிப்பதற்கு இடையூறு செய்து வருவதாகவும், இது குறித்து வாதி மேற்படி விஜயபாஸ்கரருக்கும் அவரது மேல் அதிகாரிகளுக்கும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்து அந்த அறிவிப்பை மேற்படி நபர்கள் பெற்றுக்கொண்ட பிறகும், தாவா சொத்துகளை மனுதாரர்கள் அனுபவிப்பதை தொடர்ந்து இடையூறு செய்து வருவதாகவும், எனவே, விஜயபாஸ்கரன் என்பவரையும் இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

10. 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் செம்பனார்கோவில் நீர்வளத்துறை பாசனப்பிரிவு உதவிப்பொறியாளர் விஜயபாஸ்கரன் அவர்களை தனிப்பட்ட முறையில் வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறுவதற்கு தக்க காரணங்களை மனுதாரர்கள் கூறவில்லை என்றும், தாவா சொத்திற்கும் விஜயபாஸ்கருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், அவ்வாறு உள்ள நிலையில் விஜயபாஸ்கரன் 1–ம் எதிர்மனுதாரருடன் வஞ்சக கூட்டு சேர்ந்துகொண்டு தாவா சொத்துகளை மனுதாரர் அனுபவித்து வருவதை இடையூறு செய்து வருவது சரியல்ல என்றும், தாவா 2வது அயிட்ட சொத்திற்கு வடக்கே உள்ள வெட்டு வாய்க்கால் உள்ளது என்றும், அதன் வலது கரையில் 1–ம் வாதியின் கணவர் ஆக்கிரமித்து வேலி வைத்து அடைத்ததை நீர்வளத்துறை அதிகாரியான விஜயபாஸ்கர் வட்டாட்சியர் முன்னிலையில் நேரடியாக தாவா இடத்தை பார்வையிட்டு மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு படி 1–ம் வாதியின் கணவர் அமைத்த வேலியை அப்புறப்படுத்தினார் என்றும், ஆனால் அந்த நடவடிக்கைகளை மதிக்காமல் மீண்டும் வாதியின் கணவர் நீர்நிலை புறம்போக்கை ஆக்கிரமித்து வேலி வைத்து அடைத்துள்ளார் என்றும், அதன் பிறகு மீண்டும் அரசாங்கத்தால் அந்த வேலியை அகற்றி அரசாங்கத்தின் வசம் எடுக்கப்பட்டது என்றும், இவைகளை மறைத்து மனுதாரர் விஜயபாஸ்கர் என்பவரை தரப்பினராக சேர்க்க

வேண்டும் என்று கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

11. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

12.மனுதாரர் தரப்பில் 1–ம் எதிர்மனுதாரருடன் நீர்வளத்துறை உதவிப் பொறியாளரான விஜயபாஸ்கரன் என்பவர் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு தாவா சொத்தினை மனுதாரர்கள் அனுபவித்து வருவதை இடையூறு செய்து வருவதாகவும், விஜயபாஸ்கரருக்கு இது குறித்து மனுதாரர்களால் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியும் விஜயபாஸ்கர் தாவா சொத்தில் உள்ள மனுதாரர்களின் அனுபவத்தினை தொடர்ந்து இடையூறு செய்து வருவதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீர்வளத்துறை உதவிப்பொறியாளரான விஜயபாஸ்கர் என்பவரை தனிப்பட்ட முறையில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என கூறுவதற்கு போதிய காரணம் காட்டப்படவில்லை என்றும், மேற்படி விஜயபாஸ்கரருக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கை பொறுத்த வரை தாவா சொத்தில் வாதிகளின் அனுபவத்தில் யார் இடையூறு செய்கிறார்களோ அவர்களுக்கு எதிராக மட்டுமே வழக்கு தாக்கல் செய்யப்படும், அவ்வாறு உள்ள நிலையில் விஜயபாஸ்கரன் என்பவர் 1–ம் எதிர்மனுதாரருடன் வஞ்சக கூட்டு சேர்நதுகொண்டு தாவா சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்தை தொடர்ந்து இடையூறு செய்வதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டிய நபரான விஜயபாஸ்கர் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர் நீதிமன்றத்தில் ஆஜராகியும் எவ்வித எதிர் உரையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் பல வழக்குகள் தொடரப்படாமல் இருப்பதை தவிர்ப்பதற்கு விஜயபாஸ்கர் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்தது என

நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனுவை அனுமதிக்கலாம் என நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**17. முடிவாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 20.02.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

(ஒப்பம்) P. கனிமொழி,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**